**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.135/2021**
**Deposition of witness of Defendant – D.W.1(ராமகிருஷ்ணன்)**
**20.08.2025**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. தாவா சொத்து குடுமியான்மலை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் சாமிநாதன்பிள்ளை.

2. எனது தகப்பனார் அழகம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டதில் நாகலெட்சுமி என்ற நாகம்மாள், காமாட்சி, வாதி சுப்புலட்சுமி மற்றும் நான் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான்.

3. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது தாவா சொத்துக்களை நானும், எனது பெற்றோர் மற்றும் சகோதரிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான்.

4. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோதே நாகம்மாள், காமாட்சி, வாதி சுப்புலட்சுமி ஆகியோருக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். அவ்வாறு திருமணம் செய்து கொடுக்கும்போது அவர்களுக்கு சீர்வரிசை கொடுக்கவில்லை என்றும், தாவா சொத்துக்களை பிரிவினை செய்யும்போது பாகம் கொடுப்பதாக நானும், எனது தகப்பனாரும் சொன்னோம் என்றால் இல்லை.

5. எனது தகப்பனார் 34 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகு தாவா சொத்துக்களை நானும், எனது தாயார் மற்றும் சகோதரிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் இல்லை. தாவா சொத்துக்களை நானும், எனது சகோதரிகளும் கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றும், ஆனால் நான் தாவா சொத்துக்களை வெளி நபர்களுக்கு கிரையம் கொடுக்க முயற்சி செய்ததால் 18.03.2021ஆம் தேதி எனக்கும், 2ஆம் பிரதிவாதியின் தாயார் காமாட்சிக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு

அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு எனது வழக்கறிஞர் மூலம் வாதிக்கு வாட்ஸ்அப் வழியாக பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பிற்கு வாதியால் பதில் அறிவிப்புடன் கூடிய ரீஜாயின்டர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதற்கு நான் மறு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

6. எனது தகப்பனார் பெயரில் இருந்த பட்டாவை நான் பெயரளவிற்கு எனது பெயரில் மாற்றிக்கொண்டேன் என்றும், அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல.

7. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது தாவா சொத்து அரசு புறம்போக்காக இருந்தது என்றும், அதில் தாவா கிராமத்தை சேர்ந்த திருப்பதி செட்டியார் அனுபவம் செய்து வந்தார் என்றும், அந்த இடத்தில் எனது தகப்பனார் சாமிநாதன் வாடகைக்கு குடியிருந்து வந்ததாகவும், அதை தரை வாடகைக்கு எடுத்து குடிசை போட்டு வசித்து வந்தார் என நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

8. தாவா சொத்து எந்த காலத்திலும் திருப்பதி செட்டியார் அனுபவத்தில் இல்லை என்றும், அதில் எனது தகப்பனார் தரை வாடகைக்கு இருக்கவில்லை என்றும், தாவா சொத்தை எனது தகப்பனார் அனுபவம் செய்து வந்து தார்சு வீடு கட்டி, மின்இணைப்பு பெற்று கூட்டு குடும்பமாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல.

9. நான் எலக்ட்ரீசியன் வேலை பார்த்து வந்த வருமானத்தை கொண்டும், எனது தகப்பனாரின் வருமானத்தை கொண்டும் எனது சகோதரிகளுக்கு சீர்வரிசைகள் செய்து திருமணம் செய்து வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

10. தாவா சொத்தை 1986ஆம் ஆண்டு திருப்பதி செட்டியாரிடம் இருந்து ரூ.80க்கு தக்க சாட்சிகள் முன்னிலையில் வாய்மொழியாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. மேற்படி திருப்பதி செட்டியாரை விசாரித்தால் நான் சொல்லியுள்ள விவரம் உண்மையா என தெரியவரும் என்றால் சரிதான்.

12. தக்க சாட்சிகள் முன்னிலையில் வாய்மொழி கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன், அந்த சாட்சிகள் யார் என்றால் அவர்கள் பற்றி உள்ளூரில் தான் கேட்கவேண்டும். அவர்கள் இறந்துவிட்டார்கள்.

13. நான் சொல்லியுள்ளதுபோல் கிரையம் வாங்கவில்லை என்றும், திருப்பதி செட்டியார் என்ற நபரே கிடையாது என்றும், தாவா சொத்தில் வாதியின் பாக உரிமையை மோசடி செய்யும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

14. எனது குடும்பத்தில் நான் ஒரே ஆண்மகன் என்பதால் கூட்டு குடும்பத்திற்காக எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். நாகம்மாளின் கணவர் இறந்தபிறகு அவரை நான் பராமரித்து வந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15. நாகம்மாளின் கணவர் இறந்தபிறகு வாதி அந்த சொத்தில் பாகம் கேட்டு பிரச்சனை செய்ததாகவும், அதனால் அந்த சொத்தை விற்று எனது பாக பங்கையும் சேர்த்து வாதிக்கு கொடுத்துவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

16. எனது வருமானத்தை கொண்டு தாவா சொத்தில் வீடு கட்டியதாக சொல்வது பொய் என்றும், எனது தகப்பனார் இருக்கும்போதே தாவா சொத்தில் தார்சு வீடு கட்டிவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல.

17. எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட 80 பவுன் நகைகளை எனது சகோதரிகள் சரிசமமாக பிரித்துக்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 80 பவுன் நகைகளை வாதி சுப்புலட்சுமியே எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். 80 பவுன் நகைகளை வாதி சுப்புலட்சுமியே எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாக எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், சொல்லியுள்ளதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

18. தாவா சொத்து எனது தனிப்பட்ட சொத்து என்றும் , தமிழ்நாடு அரசு திருத்த சட்டம் மற்றும் மத்திய அரசு திருத்த சட்டம் 2005ன் படி தாவா சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

19. தாவா சொத்தில் எனக்கும், வாதிக்கும் தலா 1/3 பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/–திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.